செ.வெ.எண்.334/2009/செமதொஅ நாள்: 09.10.2009

**காஞ்சிபுரத்தில் நீரில் மூழ்கி பலியான 3 குழந்தைகளின் பெற்றோருக்கு மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு.மு.க.அழகரி அவர்களின் பரிந்துரையின் பேரில் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ.1.5 இலட்சம் உதவித் தொகை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப தலைமையில் வழங்கினார்.**

மாண்புமிகு மத்திய இரசாயன துறை அமைச்சர் திரு.மு.க.அழகரி அவர்களின் பரிந்துரையின் பேரில் தமிழக முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து ரூ.1.5 இலட்சத்தை 2001 ஆண்டு நீரில் மூழ்கி பலியான 3 குழந்தைகளின் பெற்றோருக்கு மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் வழங்கினார்.

காஞ்சிபுரம் புண்ணிய கோட்டீஸ்வரர் கோயில் தெருவில் வசிக்கும் தவமணி புகழேந்தி தம்பதியின் குழந்தைகள் விஜயசங்கர் (11), பரசுராமன் (9), இளை சூரியன் (4) ஆகிய மூவரும் 25.10.2001 அன்று வீட்டின் அருகில் இருந்த குட்டையில் தங்களது சைக்கிளை சுத்தம் செய்தார்கள். அப்போது எதிர்பாராத விதமாக அந்த சைக்கிள் தண்ணீரில் விழுந்தது. அதை எடுப்பதற்காக முயற்சி செய்த அந்த மூன்று குழந்தைகளும் தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தனர். இந்த இழப்பு குறித்து நிவாரணம் கோரி அந்த பெற்றோர் அரசுக்கு கோரிக்கை மனு கொடுத்து வந்தனர். ஆனால் எந்த உதவியும் கிடைக்கவில்லை. இந்நிலையில் அண்மையில் காஞ்சிபுரத்திற்கு வருகை தந்த மாண்புமிகு மத்திய ரசாயன துறை அமைச்சர் திரு.மு.க.அழகிரி அவர்களிடம் பலியான குழந்தைகளின் பெற்றோர் முறையிட்டு மனு கொடுத்தனர். அதை கனிவுடன் பரிசீலினை செய்த மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினார். அதன்பேரில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் பொதுநிவாரண நிதியிலிருந்து தலா ரூ.50 ஆயிரம் வீதம் மூன்று குழந்தைகளுக்கும் ரூ.1.50 இலட்சம் நிவாரண தொகையை வழங்க முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டார். அந்த தொகைக்கான காசோலையினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் குழந்தைகளின் தந்தை புகழேந்தியிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப அவர்கள் தலைமையில் வழங்கினார்.

அப்போது காலைசோலையினை பெற்றுக் கொண்ட புகழேந்தி அவர்கள் வணங்கியபடி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கருணை உள்ளத்தாலும், மத்திய அமைச்சர் திரு.மு.க.அழகிரி அவர்களின் உடனடி நடவடிக்கையாலும் இந்த உதவி கிடைத்துள்ளது. இதை வாழ்நாள் முழுவதும் மறக்கமாட்டேன் என்று கூறினார்.

வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.